# இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| M.C.O.P.No. | 244/2022 | எ.ம.சா. | :1 |
| பெயர் | திரு. மதன்குமார் | | |
| த/பெ. | : திரு. நாராயணன் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 32 | தொழில் | : |

**முதல்விசாரணை**

நான் 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்டப்பிரிவு அலுவலராக பணியாற்றி வருகிறேன். முதல்விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். தற்போது மனுவுடன் தாக்கல் செய்யும் TN 39 AM 7294 வாகனத்தின் காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது எ.ம.சா.ஆ.2 ஆகவும், 1 ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய கவர் எ.ம.சா.ஆ.3 ஆகவும், 2 ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ.4 ஆகவும், 3 ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய கவர் எ.ம.சா.ஆ.5 ஆகவும், TN 39 AM 7294 வாகனத்தின் மோ.வா.ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும், TN 43 K 7608 வாகனத்தின்

மோ.வா.ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் இறந்துபோனவர் ரஞ்சித் என்றால் சரிதான். அவர் விபத்து சமயத்தில் இளநிலை அறிவியல் 2ம் ஆண்டு படித்து வந்ததாக எங்கள் விசாரணையில் தெரிந்துகொண்டோம் என்றால் தெரியாது. TN 39 AM 7294 வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்தினால் இருவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன ரஞ்சித் அவரது பெற்றோருக்கு ஒரே ஆண் மகன் என்றால் அது பற்றி தெரியாது. லாரியின் ஓட்டுநர் பெயர் கண்ணன் என்றால் சரிதான். இறந்துபோனவர் வாகனத்திற்கு 3ம் நபர் என்றால் சரிதான். காப்பீட்டு விதிமுறை மீறல் எதாவது இருப்பினும் அது 3ம் நபரை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள லாரியின் ஓட்டுநருக்கு எதிராகத்தான் போலீசார் வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். லாரி ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லையென்றாலும் கூட எங்களுடைய நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுத்துவிட்டு அதனை உரிமையாளரிடமிருந்து வசூலிக்கவேண்டும் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.